8th November 1966]

இருப்பதாகத் தெரிகிறது. அதிலே 8,000-க்கு மேற்பட்ட நிலத்திற்கு ஒரு ரேட்டுக்கு மேற்பட்ட தண்டத் தீர்வை விதிக்கப்படுவதாக விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய தண்டத் தீர்வையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்திற்கு முறையீடு வந்திருக்கிறதா? இந்த நிலங்களை நன்செய்யாக மாற்ற அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : அடிக்கடி இந்தக் கோரிக்கைகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. தாம்பிரபரணி, மணிமுத்தாறு சிஸ்டத்தைப் பொறுத்தவரை மற்ற சிஸ்டங்களோடு ஒப்பிட்டுச் சொல்லத் தயாராக இல்லை. இங்கிருக்கக்கூடிய விசேஷ முறையைப் பார்க்கும்போது இங்கு மூன்று சாகுபடிகள் நடக்கின்றன. அட்வான்ஸ் கார், கார், பிஷாணம் என்று மூன்று சாகுபடிகள் நடக்கின்றன. தண்ணீர் கொடுக்கிறபோது அட்வான்ஸ் காருக்கு குறிப்பிட்ட இலக்கு வைத்திருக்கிறோம். தண்ணீர் வந்தவுடனே யாருக்கு உரிமையில்லையோ அவர்களும் விவசாயம் செய்யத் தொடங்குகிறார்கள். இதனால் கார் சாகுபடி பாதிக்கப்படுகிறது. காருக்குத் தண்ணீர் கொடுக்கும்போது அதிலே உரிமை இல்லாதவர்கள் சாகுபடி செய்கிறார்கள். ஆகவே, இதிலே ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்க்க வேண்டுமென்ற முறையில் இருக்கக்கூடிய முறையை மாற்றியமைக்க தீர்க்கமான பரிசீலனை செய்து மாற்றியமைக்க வேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஒரு பக்கத்தில் தண்ணீர் வருஷா வருஷம் மழைக் காலத்தில் வீணாகிக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. அதே சமயத்தில் இரு போக நிலத்திற்கு மத்தியில் ஒரு போக நிலமும், நஞ்சை நிலமும் இருக்கின்றன. அதனால் தவிர்க்க முடியாத நிலையில் அவற்றையும் நன்செய்யாகப் பயிரிடக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைக் காலா காலத்தில் போக்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கஷ்டத்தை காலா காலத்தில் போக்க வேண்டுமென்றால் அங்கிருக்கக்கூடிய நிலைமைகளைச் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதிகமாகத் தண்ணீர் இருக்கும்போது அந்த நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதில் சிரமம் இல்லை. தண்ணீர்ப் பற்றாக்குறை வரும்போது எல்லோருக்கும் கஷ்டம் வருகிறது. இதையெல்லாம் மனத்தில் வைத்துச் செய்யவேண்டும்.

புயலினால் சேதம்

***517 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 30—4—1966 இரவு அடித்த புயலால் திண்டிவனம் வட்டம் வானூர் தொகுதியில் உயிர் இழந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் முறையே எத்தனை பேர் ?

(இ) உயிர் இழந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(உ) பொருளிழந்தவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா?

(எ) ஆமெனில், எந்தெந்த தலைப்புகளின் கீழ்?

கனம் திரு. வெ. ராமையயா : (அ) மூன்று பேர் உயிரிழந்தனர். 1359 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

(இ) புயலால் பாதிக்கப்பட்டு உதவிபெறத் தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கு ரூ. 66,365 ரொக்க மானியம் வழங்கப்பட்டது.

(உ) & (எ) ஆம். சேதமடைந்த படகுகள், கட்டுமரங்கள், வலைகள் ஆகியவற்றைப் பழுது பார்க்கவும், புதுப்பிக்கவும் உதவித் தொகையாக 39,600 ரூபாயும், கடனாக 39,600 ரூபாயும் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் சொன்ன உதவிகள் எல்லாம் கடற்கரை ஓரத்தில் வாழுகின்ற மீனவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகைகள் நிலப் பகுதியில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை. அவர்கள் விடுகள் சேதமடைந்து தங்களுடைய சொத்தையெல்லாம் இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அப்போது கொடுக்காவிட்டாலும் இப்போது புயல் அடித்து எல்லோரும் மிக அதிகமான அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முன்பு அவர்களுக்கு உதவி கொடுக்கத் தவறிவிட்டாலும் இப்போதாவது அவர்களுக்கு உதவி கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையயா : இந்தப் புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசாங்கம் உதவி செய்யும். அந்தப் புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் எது நியாயமோ அந்த அளவில் உதவி செய்யப்பட்டிருக்கிறது. கூரை வீடுகள் போய்விட்டால் 30 ரூபாயும், துணி மணிகள் வாங்க 10 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. பொருள் சேதம் ஏற்பட்டு அதற்காகக் கடன் உதவி கோரி மனு வந்தால் அதையும் அதிகாரிகள் பரிசீலனை செய்து என்ன உதவியைச் செய்ய வேண்டுமென்று பரிசீலித்துச் செய்வார்கள்.

தீ விபத்துக்கள்

*518 **கேள்வி.—திரு. எம் எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 ஜனவரி மாதத்திலிருந்து நாளது தேதிவரை நமது ராஜ்யத்தில் எத்தனை தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன?

(இ) அவற்றினால் ஏற்பட்ட உத்தேச பொருள் சேத மதிப்பென்ன?